ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2440/22 - 2025 ජුනි මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.06.12

*2440/22 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) இலங்கை மின்சார சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்***

விலக்களித்தலுக்கான சான்றிதழ் வழங்கல்

திருத்தியமைக்கப்பட்ட 2009ஆம் ஆண்டின் இலங்கை மின்சார சட்டத்தின் பிரிவு 10(2), எண். 20 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பின்வரும் நபர் வகையைச் சேர்ந்தவர்களுக்கு மின்சாரம் உற்பத்திக்கான உரிமம் பெற வேண்டிய தேவை இல்லாமல் விலக்களிப்பு சான்றிதழை இத்துடன் வழங்குகின்றது.

| *சான்றிதழ் இலக்கம்* | *விலக்களிக்கப்பட்ட நபர்* | *அமைப்புப் பொருந்தும் காலம்* |
|---|---|---|
| EL/EX/G/25-01 | பின்வரும் தொழில்நுட்ப அமைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி கூரையிலுள்ள சூரிய ஒளிச்சிறப்பியமைப்பு (RTSPV) அமைப்பின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்பவர்கள் :<br>- ஒரே மீற்றரும், ஒரே கணக்கும்<br>- இரண்டு மீற்றர்களும், ஒரே கணக்கும்<br>- இரண்டு மீற்றர்களும், இரண்டு கணக்குகளும் | இலங்கை அரசுப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் திருதத்தப்படுவது அல்லது திரும்பப் பெறப்படும் வரை செல்லுபடியாகும். |

தலைவர்,
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

1A - PG 7149 — 05 (2025/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலே குறிப்பிடப்பட்ட விலக்களிப்பு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அமலும் பொருந்தும்.

## *1. வரையறைகள் மற்றும் விளக்கங்கள்*

- ***வரையறைகள்***

இவ்விதிமுறைகளில், வேறு வகையில் குறிப்பிடப்படாவிட்டால் அல்லது சூழ்நிலை வேறு வகையில் தேவைப்படாவிட்டால் :

| | |
|---|---|
| "சட்டம்" | திருத்தியமைக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் இலங்கை மின்சாரச் சட்டம் 20 ஆம் இலக்கத்தைக் குறிக்கின்றது. |
| "ஆணைக்குழு" | பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் (PUCSL Act) கீழ் நிறுவப்பட்ட இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை குறிக்கின்றது. |
| "மின்சார விநியோக உரிமம் பெற்றவர்" | சட்டத்தின் பிரிவு 13(1)(c)(i)(c) இன் கீழ் மின்சாரம் விநியோகிக்க வழங்கப்பட்ட உரிமத்தைக் கொண்ட நபரை குறிக்கின்றது. |
| "மின் பரிசோதகர்" | இது, சட்டத்தின் பிரிவு 6 இன் கீழ் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நபரை குறிக்கின்றது. இப்பரிசோதகர், மின்சார (மின் பரிசோதகர்களின் செயல்பாடுகள், கடமைகள் மற்றும் செயல்முறை) விதிமுறைகள், 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தின் கீழ் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வார். |
| "சூழல் சட்டங்கள்" | இது, சுற்றாடலை பாதுகாப்பதற்கான நோக்கில் நடைமுறையில் உள்ள மற்றும் காலமுறையாக அமையக்கூடிய சட்டங்களை குறிக்கின்றது. இவை, மனித ஆரோக்கியம், தாவரம், விலங்கு, மற்றும் அவற்றின் மீது சார்ந்துள்ள சூழலமைப்புகளை (eco-systems) உள்ளடக்கியவையாகும். மேலும், சந்தேகத்திற்கு இடமின்றி, இதில் 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்கம் என்ற தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் வாயு, நிலம், நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் தாக்கம் மதிப்பீடு தொடர்பான அனைத்து தொடர்புடைய சட்டங்களும் அடங்கும். |
| "விலக்களிக்கப்பட்ட நபர்" | இது, சட்டத்தின் பிரிவு 10(1) இன் கீழ் மின்சார உற்பத்திக்காக உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும் நபர் வகையைச் சேர்ந்த எந்தவொரு நபரையும் குறிக்கின்றது. |
| "மின்சாரம் உற்பத்தி வசதி" | இது, மின்சார உற்பத்திக்காக அல்லது அதனுடன் தொடர்புடைய வகையில் பயன்படுத்தப்படும் நிலையங்கள், உபகரணங்கள், கருவிகள், சாதனங்கள் மற்றும் இணைப்பு, பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு உபகரணங்களை உள்ளடக்கிய எந்தவொரு வசதியையும் குறிக்கின்றது.<br><br>இவ்வசதி, உரிமம் பெற்ற விநியோக வலையமைப்பிற்கு மின்சாரம் வழங்கும் நோக்கத்திற்காக இயங்கும். |
| "தகவல்" | இது, ஆணைக்குழு கோரியிருந்தாலும் இல்லையெனினும், புத்தகங்கள், ஆவணங்கள், பதிவுகள், கணக்குகள், மதிப்பீடுகள், வரி விபரங்கள், தரவுகளையும், எந்த வடிவமைப்பிலும் அல்லது ஊடகத்திலும், ஆணைக்குழு குறிப்பிடும் விதத்தில் வழங்கப்படக்கூடியவையாக இருக்கும் அனைத்தையும் குறிக்கின்றது. |
| "அறிவித்தல்" | இது, சட்டத்தின் பிரிவு 10(2) இன் கீழ் வெளியிடப்பட்ட இவ்வர்த்தமானி அறிவித்தலை குறிக்கின்றது. |
| | |
| "பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்" | இது, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டம், 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கத்தைக் குறிக்கின்றது. |
| "இடம்" | இது, விலக்களிக்கப்பட்ட நபரால் மின்சார உற்பத்தி வசதி இயக்கப்பட்டும் பராமரிக்கப்படுவதுமான இடத்தைக் குறிக்கின்றது. |

| | |
|---|---|
| "நியம கட்டணத் தீர்வை ஒப்பந்தம்" | இது, சட்டத்தின் பிரிவு 25(4) மற்றும் விநியோக சேவைகள் நெறிமுறையின் அடிப்படையில், கட்டணத் தீர்வு வாடிக்கையாளர் மற்றும் மின்சார விநியோக உரிமம் பெற்றவருக்கிடையில், மின்சாரம் வழங்கும் இடத்துக்கான தரநில ஒப்பந்தத்தை குறிக்கின்றது. |
| "கட்டணத் தீர்வு வாடிக்கையாளர்" | இது, மின்சார விநியோக உரிமம் பெற்றவருடன் நியம கட்டணத் தீர்வை ஒப்பந்தத்தில் இணைந்துள்ள வாடிக்கையாளரை குறிக்கின்றது. மேலும், இது சட்டத்தின் பிரிவு 25 இன் கீழ், மின்சாரம் பெறவேண்டிய தேவையுடைய நபரையும், விநியோக உரிமம் பெற்றவரால் மின்சாரம் வழங்கப்படும் நபரையும் குறிக்கின்றது. |

- **விளக்கங்கள்**

இவ்விளக்கக் குறிப்புகளுக்காக, பின்வரும் சொற்களுக்கு கீழே வழங்கப்பட்டுள்ள அர்த்தங்கள் உரியவையாகக் கருதப்படும்.

- ***மின்மானி*** *(ஒரே மின்மானியும், ஒரே கணக்கும் என்ற சூழ்நிலையில்):*

இந்த சூழ்நிலையில், இடத்திற்கு (Site) இறக்குமதி செய்யப்படும் மற்றும்/ அல்லது ஏற்றுமதி செய்யப்படும் மின்சாரத்தின் நிகர அளவை பதிவு செய்யும் நோக்கில், மின்சார விநியோக உரிமம் பெற்றவர் வழங்கி நிறுவும் மின் மானியை குறிக்கின்றது.

- ***மின்மானிகள்*** *(இரு மின்மானிகள் மற்றும் ஒரே கணக்கும், இரு மின் மானிகள் மற்றும் இரு கணக்கும் என்ற சூழ்நிலைகளில்):*

இந்த சூழ்நிலையில், மின்சார விநியோக உரிமம் பெற்றவர் வழங்கி நிறுவும் பின்வரும் மின் மானிகளை குறிக்கின்றது:

a) இடத்திற்கு இறக்குமதி செய்யப்படும் மின்சாரத்தின் மொத்த அளவை பதிவு செய்யும் மின் மானி, மற்றும்

b) மின்சார உற்பத்தி வசதியால் ஏற்றுமதி செய்யப்படும்மொத்த மின்சார அளவை பதிவு செய்யும் மின் மானி.

- ***கணக்கு*** *(ஒரே மின்மானி மற்றும் ஒரே கணக்கும், இரு மின் மானிகள் மற்றும் ஒரே கணக்கும் என்ற சூழ்நிலைகளில்):*

இது, நியம கட்டணத் தீர்வை ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கேற்ப, மின்சார விநியோக உரிமம் பெற்றவரால் உருவாக்கப்பட்டு, கட்டணத் தீர்வு வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட மின் விநியோகக் கணக்கை குறிக்கின்றது.

- ***கணக்குகள்*** *(இரு மின்மானிகள் மற்றும் இரண்டு கணக்குகள் என்ற சூழ்நிலைகளில்):*

இது, பின்வருவனவற்றைக் குறிக்கின்றது.

a) நியம கட்டணத் தீர்வை ஒப்பந்தத்தின் கீழ், மின்சார விநியோக உரிமம் பெற்றவரால் கட்டணத் தீர்வு வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட மின் விநியோகக் கணக்கு, மற்றும்

b) மின்சார உற்பத்தி வசதியால் ஏற்றுமதி செய்யப்படும் மின்சாரத்தை பதிவு செய்வதற்காக, மின்சார விநியோக உரிமம் பெற்றவரால் உருவாக்கப்பட்டு, குறிப்பாக அந்த உற்பத்தி வசதிக்கு ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட கணக்கு.

**2. ஒழுங்குபடுத்தல் கருவிகளுக்கேற்ப கீழ்படிதல்**

விலக்களிக்கப்பட்டநபர், மின்சார உற்பத்தி வசதியின் நிறுவல், செயல்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளில், சட்டத்தின்படி ஆணைக்குழு வெளியிடும் பாதுகாப்பு, தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டு குறியீடுகள், விதிமுறைகள், தரநிலைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைச் சட்டவிதிகளை அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் புதுப்பிப்புகளை உட்பட, முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

**3. ஆணைக்குழுவின் முடிவுகள், உத்தரவுகள், வழிநடத்தல்கள் மற்றும் தீர்மானங்கள்**

(i) விலக்களிக்கப்பட்ட நபர், மின்சார உற்பத்தி வசதியின் நிறுவல், செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளில், ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும் அனைத்து முடிவுகள், உத்தரவுகள், வழிநடத்தல்கள் மற்றும் தீர்மானங்களிற்கு

(ii) இதனுடன் தொடர்புடைய நியாயமான செலவுகள் அனைத்தும் விலக்களிக்கப்பட்ட நபரின் பொறுப்பாகும்.

**4. ஆணைக்குழுவுக்குத் தகவல் வழங்குவதற்கான ஏற்பாடு**

விலக்களிக்கப்பட்ட நபர், சட்டம் அல்லது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அல்லது அதன்படி ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட பணிகளை நிறைவேற்றும் நோக்கில், ஆணைக்குழு தேவையெனக் கருதும் முறையில், காலக்கெடுவில் மற்றும் வடிவமைப்பில், தேவையான தகவல்களை வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**5. நுழைவுரிமை**

(i) முன்கூட்டிய அறிவிப்புடன், விலக்களிக்கப்பட்ட நபர், ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரபூர்வ அலுவலர்கள் (மின் பரிசோதகர்கள் உட்பட) இடத்திற்கு நுழைய அனுமதிக்க வேண்டும். அத்தகைய அலுவலருக்கு மின்சார உற்பத்தி வசதி, அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள், கட்டமைப்புகள், மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் பதிவுகள் ஆகியவற்றை பரிசோதிக்கவும், தகவல் ஆவணங்களைப் பரிசீலிக்கவும் உரிமை உண்டு.

(ii) விலக்களிக்கப்பட்ட நபர் உரிமையாளர் அல்லது வசிப்பவர் அல்லாத நிலைமையில், அந்த இடத்தின் உரிமையாளர் அல்லது வசிப்பவரிடமிருந்து அனுமதி பெற வேண்டும். எனினும், அவசர நிலையை முன்னிட்டு, அறிவித்தல் வழங்கும் தேவை நீக்கப்படலாம்.

**6. வலை இணைப்பு மற்றும் செயற்பாடு**

(i) விலக்களிக்கப்பட்ட நபர், மின்சார உற்பத்தி வசதியை மின்சார விநியோக உரிமம் பெற்றவரின் விநியோக வலையத்துடன் இணைக்க, அவருடன் ஒப்பந்தத்தில் சேர வேண்டும்.

(ii) பொது மக்கள், விநியோக உரிமம் பெற்ற பணியாளர்கள் மற்றும் மின்வலையத்திற்கு அபாயங்கள் ஏற்படாதவாறு, தனிமைப்படுத்தலைத் தடுக்கும் பாதுகாப்பு அமைப்புகள் (anti-islanding protction) மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்கள் இந்த உற்பத்தி வசதியில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

**7. சூழல்**

இவ்வாறு பின்பற்ற வேண்டிய சட்டங்களின் கீழ் விலக்குகள் அல்லது அவகாச காலங்கள் வழங்கப்பட்டிருந்தால், அவற்றிற்கு உட்பட்ட வகையில் விலக்களிக்கப்பட்ட நபர், இலங்கையில் நடைமுறையில் உள்ள அனைத்து பொருந்தக் கூடிய சூழல் சட்டங்களை பின்பற்ற வேண்டிய பொறுப்பினை உடையவராக இருப்பார்.

**8. பாதுகாப்பு**

பயன்பாட்டிலிருந்து நீக்கும் நடைவடிக்கைகள் உட்பட, விலக்களிக்கப்பட்ட நபர், மனிதர்கள், மின்சார உற்பத்தி வசதி, சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை, காயங்கள், சேதங்கள் மற்றும் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்க, தேவையான அனைத்து நியாயமான மற்றும் அவசியமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**9. காப்புறுதி**

மின்சார உற்பத்தி வசதியுடன் தொடர்புடைய அபாயங்களை நிர்வகிப்பதற்கும், அவற்றுக்கான காப்புறுதித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் விலக்களிக்கப்பட்ட நபர்,நியாயமான மற்றும் அறிவுடனும் எச்சரிக்கையுடனும் கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**10. விலக்குச் சான்றிதழின் மாற்றம்**

இந்த அறிவித்தலின் எந்தவொரு நிபந்தனையையும் மாற்றும் அல்லது திருத்தும் உரிமையை ஆணைக்குழு வைத்திருக்கின்றது.

***11.* குற்றம்**

*இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிபந்தனைக்கும் கீழ்படியத் தவறும் அல்லது மீறும் விலக்களிக்கப்பட்ட நபர், சட்டத்தின் கீழ் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.*

***12.* இரத்துச் செய்தல் மற்றும் தொடர்ந்திருக்கும் செல்லுபடிகள்**

*2009 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 10(3) இன் கீழ் வெளியிடப்பட்ட 2017, பெப்புருவரி 14 ஆந் திகதியிலான வர்த்தமானி அத்தியாவசிய வெளியீடு இல. 2006/19 மற்றும் 2018, மார்ச் 9 ஆந் திகதியிலான இல. 1961/50 ஆகியவற்றின் கீழ் வெளியிடப்பட்ட விலக்குச் சான்றிதழ்கள் இத்துடன் இரத்துச் செய்யப்படுகின்றன. மேலும் அவை தற்போது செயற்பாட்டில் உள்ள எந்தவொரு திட்டத்திற்கும் இனிமேல் பொருந்தாது. தற்போது செயற்பாட்டில் உள்ள அத்தகைய அனைத்து திட்டங்களும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அமைப்புகளுக்கு ஏற்ப, இச்சான்றிதழின் கீழ் வருவதாகக் கருதப்படும்.*

EOG *06-0110*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது